பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்! கிழமை இல. 46- 2025 .

வணக்கம் அன்பார்ந்த பெற்றோர்களே!

- மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகள் 21,.11.25ம் திகதி வெள்ளி, 22.11.15 சனி ஆகிய நாள்களில் வகுப்புநேரத்தில் நடைபெறும்.
-
- **அரையாண்டுத்தேர்வுகள் 12,13.12.2025ம் திகதிகளில் நடைபெறும்.**

**19.12.2025ம் திகதி வெள்ளிக்கிழமை 18:45 மணிக்கு நத்தார் விழா நடைபெறும்.** அனைத்துலக ஆண்டிறுதித் தேர்வுத்தாள் பொதிகள் 22.09.2025 ம் திகதி யேர்மனுக்கு கிடைத்ததாகவும் 22.10.25 ம் திகதி திருத்தப்பணிகள் நிறைவடைந்து விட்டதாகவும் தகவல் வந்துள்ளது. வெகுவிரைவில் பெறுபேறுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

- **பிரத்தியேக** ஆண்டுக்கூட்டம் 30 .11.2025 ம் **திகதி** 15:00 மணிக்கு நடைபெறும். இதுவரை தவணைக்கட்டணங்கள் அங்கத்தவர் கட்டணங்களைச் செலுத்தாதவர்கள் 15.11.2025ம் திகதிக்கிடையில் செலுத்தி முழு அங்கத்தவர் உரிமையை பெற்றுக்கொள்ளவும்.
- **தைப்பொங்கல்விழா 17.01.2026 சனிக்கிழமை நடைபெறும். கோலாட்டம் நிகழ்வில் பங்குபெற விரும்பும் 4,5ம் வகுப்பு மாணவர்களும் இன்னியம் நிகழ்வில் பங்குபெற விரும்பும் பாடசாலையில் அல்லது வெளியில் கலைப்பாடம் கற்கும் மாணவர்களும் தங்கள் பெயர்களை வகுப்பாசிரியரிடம் அல்லது நிருவாகத்தினரிடம் கொடுக்கவும்.**
- **பொங்கல்விழாவில் நடைபெறும் அறிவுமுற்றம் நிகழ்விற்கான தெரிவுப்போட்டி 6,7,8,9,10 ம் வகுப்பு மாணவர்களுக்கு வெகுவிரைவில் நடைபெறும். மாணவர்களைத் தயார்ப்படுத்தவும்.**

**நிதி:**

எம்மால் வழங்கப்பட்ட தவணைக்கட்டணங்கள்(2023, 2024, 2025 ஆண்டுக்குரியவை) அன்னையின் அங்கத்துவ கட்டணங்கள் ஆகியவற்றை முழுமையாகச் செலுத்தியவர்கள், வளாகச் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக பங்குகொள்பவர்களே முழுமையான அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆண்டுக்கூட்டம்:**

ஆண்டுக்கூட்டம் 30.11..2025 ம் திகதி 15:00 மணிக்கு நடைபெறும். முழுமையான அங்கத்துவத்துவ உரிமையினை பெற்றவர்கள் மட்டும் கூட்டத்திற்கு வருகை தரலாம். அத்துடன் முழுமையான அங்கத்துவத்துவ உரிமையினை பெற்ற 15வயதை நிறைவு செய்த 10,11,12ம் வகுப்பு மாணவர்களும் ஆண்டுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.

எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 41381568 , 90104881

நன்றி!

நிர்வாகம் - றொம்மன் வளாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.